# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 32/ந/2026.  நாள் 14.08.2026

S.அன்பழகன்,
துறையூர்,  திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

1)நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்கள்

2)உரிமையாளர், தங்கமயில் சூப்பர்
ஷாப்பி கட்டிடம், திருச்சி சாலை,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின்28.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று பெறப்பட்டு 32/ந/2026 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின்28.01.2026 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திருச்சி மாவட்டம், துறையூர், திருச்சி சாலையில் கட்டப்பட்டுள்ள தங்கமயில் சூப்பர் ஷாப்பி அமைந்துள்ள கட்டிடம் தரை கீழ்தளத்தில் அலுவலகம், தரைத்தளத்தில் சூப்பர் மார்க்கெட், முதல் தளத்தில் 200 பேர் அமரக்கூடிய மினி ஹால், இரண்டாம் தளத்தில் 80 பேர் அமரக்கூடிய டைனிங் ஹால் மற்றும் 9 ரூம்களுடன் சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் 2 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயின் மீது மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி அதுவும் கட்டிடத்தை சுற்றி 1 அங்குலம் கூட செட்பேக், 1 அங்குலம் கூட பார்க்கிங் இல்லாமல் விதிமீறி கட்டப்பட்டுள்ளது. எனவே விதிமீறிய தங்கமயில் கட்டிடத்தை உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 29.10.2025ல் புகார் அனுப்பி அதனை அவர் 30.10.2025ல் பெற்றுக்கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே TNCDBR , 2019ன்படி கட்டிட வரைபடத்தில் (Blue print) parking and set back area குறிப்பிட்டுதான் அனுமதி

நகராட்சியால் வழங்க முடியும் என்று சட்டம் இருக்கும்போது, கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் செட்பேக் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடம் 2 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி நகராட்சியிடம் உரிய அனுமதி பெறாமல் கட்டிட பணி நிறைவு சான்று பெறாமல் இயங்கி வருவதாக எனக்கு சந்தேகம் எழுவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குனரின் அறிவுறுத்தல்களை துறையூர் நகராட்சி ஆணையர்கள் பின்பற்றாத காரணத்தால்தான் கடந்த 10 வருடங்களாக தங்கமயில் கட்டிடம் விதிமீறி செயல்பட்டு வருவதாகவும், 10 வருடங்களாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் விதிமீறிய தங்கமயில் நிர்வாகியிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டார்கள் என்பது தெளிவாக புரிவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் கட்டிடங்களுக்கு உடந்தையாக இருந்த அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளதை அறிந்தும் 10 வருடங்களுக்கு மேலாக எங்கு பார்த்தாலும் விதிமீறல் கட்டிடங்கள் துறையூர் நகர் முழுவதும் புற்றீசல் போல் உருவாகி உள்ளதை பார்க்கும்போது அனைத்து ஆணையர்களும் தங்களை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை விட அதிகாரம் படைத்தவர்களாக எண்ணி செயல்பட்டுள்ளது புரிவதாக குறிப்பிட்டதோடு, சமீபத்தில் கடமையை செய்ய தவறிய I.A.S. ஆபிசருக்கு 1 மாதம் சிறைத்தண்டனை, அபராதம் விதித்துள்ளதையும், தவறு செய்த ADGPயை கைது செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதையும், ஆணையருக்கு சுட்டிகாட்ட விரும்புவதாக கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்சநீதிமன்ற உத்தரவு எண்.12199–12200 நாள் 30.04.2025) Roc. எண்.3555/2025/TP3 நாள் 15.05.2025 கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பி உள்ளதை ஆணையருக்கு நினைவூட்டியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற உத்தரவுகளை அறிந்தும் மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெற்று அதில் சாப்பிட்டு வருகின்றோம் என்கிற குற்ற உணர்ச்சி சிறிதும் இன்றி தாராளமாக லஞ்சம் வாங்கி கொண்டு கடந்த 10 வருடங்களுக்கு மேல் பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் துறையூர் நகர் முழுவதும் புற்றீசல் போல் ஏராளமான விதிமீறல் கட்டிடங்களை உருவாக்கி விதிமீறல் கட்டிடங்கள் அதிகம் உள்ள நகராட்சி பட்டியலில் தமிழ்நாட்டிலேயே முதல் இடத்தை பிடித்த நகராட்சி என்ற பெருமையை படைத்துள்ளார்கள் என்று கூறினால் அது மிகையல்ல என்று குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் நேர்மையோடு மனசாட்சிபடி தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடத்தை நேரடியாக இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR, 2019ன்படி கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் set back எவ்வளவு விடப்பட்டுள்ளது என்பதையும், கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் செட்பேக் விடப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிட வரைபடத்தில் பார்க்கிங், செட்பேக் அளவு காண்பிக்கப்பட்டு, நகராட்சியிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும், அந்த கட்டிடத்திற்கு 2 தளங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிடம் வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவுச்சான்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து தங்கமயில் சூப்பர் ஷாப்பி அமைந்துள்ள கட்டிடம் மேற்சொன்ன விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் உச்சநீதிமன்ற உத்தரவு எண்.12199–12200ல் கூறி உள்ளபடி விதிமீறிய கட்டிடத்தை முறைப்படுத்தக்கூடாது என்றும் விதிமீறிய கட்டிடத்தை இடிப்பதுதான் சட்டம் என்றும் கூறி உள்ள அடிப்படையில் தங்கமயில் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கோரி இருந்தேன். மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே தலைமைச்செயலாளரின்

சுற்றறிக்கையின்படி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்காவிட்டால் சத்தியத்தின் பக்கம் இறுதிவரை நின்று உறுதியாக நீதிவழங்கும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றம் போல் சத்தியத்தின் பக்கம் நின்று நீதி வழங்கும் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரிடமும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உயர்நீதிமன்றத்திலும் தங்களிடமும் வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும், இதுவரை விதிமீறிய தங்கமயில் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ஆணையர் தங்கமயில் கட்டிடத்திற்கு உடந்தை என்பது நன்கு விளங்குகின்றது. எனவே ஆணையர் குற்றத்தை அவரே விசாரிப்பது சட்டப்படி சரியாக இருக்காது. மேலும் ஆணையர் கொடுக்கும் அறிக்கை, வாக்குமூலம் அனைத்தும் தங்கமயில் கட்டிட நிர்வாகியை காப்பாற்றும் நோக்கத்தோடு இருக்கும்.

எனவே மதிப்புமிக்க தாங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றம் போல் நேர்மையோடு, நீதி வழங்குவதால் தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடத்தை இட நேராய்வு செய்து, அந்த கட்டிடம் TNCDBR, 2019ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தும், 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டிருந்தால் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி பார்க்கிங், செட்பேக் வசதி உள்ளதா என்பதையும் ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவுச்சான்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் கண்டறிந்து விதிமீறி தங்கமயில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் விதிமீறி செயல்படும் தங்கமயில் கட்டிடத்தை உச்சநீதிமன்ற உத்தரவின்கீழ் இடித்து அகற்றுமாறு நேர்மையின் சிகரமான தங்களை கேட்டுக்கொள்கிறேன். விதிமீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த துறையூர் நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கீழ்ப்படிந்து, தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

4. இந்நிலையில் மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிட உரிமையாளர் ஆகியோரை 10.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.4980/2025/எப்1, நாள் 05.06.2026–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்:-

"விசாரணையில் மேற்படி தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. அதில் தரைத்தளத்தில் 5096 சதுரடி பரப்பளவில் தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாக கட்டிடம் மற்றும் 136.00 சதுரடி பரப்பளவில் 1 ரூம் உள்ளது. முதல் தளத்தில் 5096 சதுரடி பரப்பளவில் தங்கமயில் மினி ஹால் மற்றும் 10 அறைகள் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 2530 சதுரடி பரப்பளவில் டைனிங் ஹால் மற்றும் 1980 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற வீடு இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 600 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற 1 ரூம் உள்ளது. Under Ground 5096 சதுரடி பரப்பளவில் குடோன் அமைந்துள்ளது. பார்க்கிங் வசதி இல்லை. முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் எதுவும் இல்லை.

மேற்படி 29.05.2026 அன்று கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம், சொத்துவரி விதிப்பு விவரம், குடிநீர் குழாய் இணைப்பு விவரம் உள்ளிட்ட அனைத்து

ஆவணங்களையும் மூன்று தினங்களுக்குள் நகராட்சியில் சமர்ப்பிக்குமாறு அதன் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்நாள் வரை எவ்வித ஆவணங்களையும் உரிமையாளர் நகராட்சியில் சமர்ப்பிக்கவில்லைல

அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை. எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம், 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் தங்கமயில் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் திரு.S.அன்பழகன் தனது 06.06.2026 நாளிட்ட கடிதத்தில் வீடு மாறுதலாகி சென்றபோது வாகனத்தில் இருந்து கீழே விழுந்து கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் முறையீட்டு மனுக்கள் 32/ந/2026 மற்றும் 41/ந/2026 மீது 10.06.2026ல் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் மேற்கண்ட முறையீட்டு மனுக்களுக்கு நான் அளிக்கும் அறிக்கையை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, கீழ்க்கண்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் கட்டப்பட்டுள்ள தங்கமயில் சூப்பர் ஷாப்பி அமைந்துள்ள கட்டிடம் தரைகீழ் தளத்தில் அலுவலகம், தரைத்தளத்தில் சூப்பர் மார்க்கெட், முதல் தளத்தில் 200 பேர் அமரக்கூடிய மினிஹால், இரண்டாம் தளத்தில் 80 பேர் அமரக்கூடிய டைனிங் ஹால் மற்றும் 9 ரூம்களுடன் சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் 2 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயின் மீது மெயின் வாசல்படி வைத்து, பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமலும் (set back) விதி மீறி கட்டப்பட்டுள்ளது. விதி மீறிய இந்த கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் கொடுத்தும் லஞ்சம் பெற்றுக்கொண்டு இதுவரை ஆணையர் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் நான் புகார் கொடுத்ததற்கு பின்புதான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட நிர்வாகிகளும் இந்த முறைமன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட நிர்வாகிகளுக்கு ஆதரவாக பார்க்கிங் இடம் புதிதாக வாங்கி உள்ளதாக ஆணையர்களும் பொய்யாக கூறி வருவதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் கட்டிட வரைபடத்தில் காண்பிக்காமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து பார்க்கிங் இடத்திற்கான ரசீது நகராட்சி மூலம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் வழக்கின் உத்தரவில் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதி முறை இருப்பதால் தங்கமயில் சூப்பர் ஷாப்பி உள்ள கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படிதான் கட்டப்பட்டுள்ளதா என்பதையும், இந்த கட்டிடம் மொத்தம் எத்தனை ஆயிரம் சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது என்பதை ஆணையரிடம் அறிக்கை பெற்று தாங்கள் உத்தரவில் தெரிவிக்குமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர்கள் தொடர்ந்து கூறி வருவதால் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No.4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறியதற்கு இதுபோதுமான காரணமில்லை என்றும் அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்றுமுறை என்று கூறி தப்பிக்க முடியாது என்றும் இது எதிர்தரப்புடன் சேர்ந்து கூட்டுச் சதியாக இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை

விஜிலென்ஸ் துறை விசாரித்து உண்மை கண்டறிய வேண்டும் என்று கடந்த 20.02.2026–ல் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குநருக்கு ரூ.50 லட்சம் அபராதம் உயர் நீதிமன்றம் விதித்துள்ளது. எனவே இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று ஆணையர் கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவின் கீழ் நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200 நாள் 30.04.2025 வழக்கின் உத்தரவில் அனுமதியற்ற கட்டிடத்தை முறைபடுத்த கூடாது என்றும் அனுமதியற்ற கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி என்றும் இதற்கு வேறு வழிஇல்லை என்று திட்டவட்டமாக உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் மாண்புமிகு தங்கள் முன்பு நடைபெற்ற பெரும்பாலான வழக்குகளில் விதிமீறிய கட்டிட நிர்வாகிகள் அனுமதி பெறாத கட்டிடத்தை முறைபடுத்த 80–Aன் கீழ் மேல் முறையீடு செய்து மனு அளித்துள்ளதை தாங்கள் சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை தாங்கள் உத்தரவில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள Tamilnadu Fire Service Rules, 1990 பற்றிய முக்கிய விதிகள் 1985 தீயணைப்பு சட்டத்தின் (Fire Service Act) கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளின்படி எல்லா வணிக உபயோக கட்டிடங்களும் அதுவும் நகராட்சி உரிமம் பெற்று நகராட்சி அனுமதி பெற்ற அனைத்து கட்டிடங்களும் தீ பாதுகாப்பு விதிகளை பின்பற்ற வேண்டும் FIRE LICENCE அல்லது NOC அவசியம், தீயணைப்பு துறையில் வாங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், இது தவிர National Building Code of India (NBC) இந்தியாவில் கட்டிடங்கள் எப்படி திட்டமிட்டு பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்பதற்கான விதிகளை வகுத்துள்ளது. NBC முக்கிய பகுதிகளில் (parts)4ல் FIRE AND LIFE SAFETY தீயணைப்பு பாதுகாப்பு கட்டாயம் என்று கூறியதோடு நகராட்சி அனுமதி பெற NBC அடிப்படையாக இருக்கும் என்று கூறி உள்ள அடிப்படையிலும் தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடம் தமிழ்நாடு தீயணைப்பு சட்டத்தின்படியும் NBC சட்டத்தின்படியும் தீயனைப்பு துறையிடம் அனுமதி பெற்றுள்ளதா என்பதை ஆணையரிடம் அறிக்கை பெற்று தாங்கள் உத்தரவில் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த முறையீட்டு மனுக்கள் 102/ந/2025, 104/ந/2025 ஆகிய இரண்டு வழக்கு விசாரணையின் போது தங்கள் முன்பாக 10.06.2025ல் நேரடியாக ஆஜராகி சத்திய பிரமாணம் செய்து அளித்த வாக்குமூலத்தில் துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் அம்பிகா அவர்கள் மேற்கண்ட 102/ந/2025 ராஜா சில்க்ஸ், 104/ந/2025 ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் ஆவணம் நகராட்சியில் இல்லை என்று தெரிவித்துவிட்டு ந.க.எண்.2654/2025/சி2 நாள் 01.08.2025 கடிதம் மூலம் எனக்கு ராஜா சில்க்ஸ், ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் கட்டிட வரைபட நகலும் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

எனவே மதிப்புமிக்க நீதிபதி பதவியில் இருக்கும் தங்கள் முன்பாகவே சத்திய பிரமாணம் செய்து ஆவணம் இல்லை என்று மிக தைரியமாக பொய்யாக வாக்குமூலம் அளித்துவிட்டு அதற்கு நேர்மாறாக ஆவணம் பெற்றுக்கொள்ளுமாறு எனக்கு கடிதம் அனுப்பிய துறையூர் நகராட்சியின் செயலை பார்க்கும் போது அனைத்து விதி மீறிய கட்டிட நிர்வாகிகளுடன் கை கோர்த்து கொண்டு அனைத்துவிதமான அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் தமிழ்நாட்டிலேயே அசைக்கமுடியாத முன்மாதிரியாக செயல்படும் நகராட்சியாக விளங்குகின்றது. எனவே இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் துறையூர் நகராட்சி ஆணையர் கொடுக்கும் அறிக்கை வாக்குமூலம் அனைத்தும் விதிமீறிய தங்கமயில் சூப்பர் ஷாப்பி நிர்வாகியை காப்பாற்றும் நோக்கத்தோடு இருக்கும் என்பதால் மதிப்புமிக்க தாங்கள் துறையூரில் உள்ள தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடத்தை நேரில் இட நேராய்வு செய்து அந்த கட்டிடம் கட்டிட வரைப்படத்தில் உள்ளவாறு முறையாக கட்டப்பட்டு தீயனைப்பு துறை அனுமதி பெற்று, நகராட்சியிடம் பணி நிறைவுச்சான்று பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்து அந்த கட்டிடம் விதி மீறி

கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள் 30.04.2025ன்படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எடுக்கும் நடவடிக்கையை மனபூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன், தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடத்தின் மீது தீயணைப்புதுறை இயக்குனரிடத்தில் புகார் அளித்துள்ளேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.4980/2025/எப்1, நாள் 09.06.2026ல் கீழ்க்கண்ட தனது மேல் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையாக சமர்ப்பித்துள்ளார்.

"விசாாணையில் மேற்படி தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. அதில் தரைத்தளத்தில் 5096 சதுரடி பரப்பளவில் தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாக கட்டிடம் மற்றும் 136.00 சதுரடி பரப்பளவில் 1 ரூம் உள்ளது. முதல் தளத்தில் 5096 சதுரடி பரப்பளவில் தங்கமயில் மினி ஹால் மற்றும் 10 அறைகள் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 2530 சதுரடி பரப்பளவில் டைனிங் ஹால் மற்றும் 1980 சதுரடி பரப்பளவில் Rcc Roof அமையப்பெற்ற வீடு இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 600 சதுரடி பரப்பளவில் Rcc Roof அமையப்பெற்ற 1 ரூம் உள்ளது. Basement Floor 5096 சதுரடி பரப்பளவில் குடோன் அமைந்துள்ளது. கட்டுமானத்தின் மொத்தப்பரப்பளவு 20534 சதுரடி ஆகும். Basement Floor 5096 (கூடுதலாக 1112) 3984 சதுரடி மற்றும் தரைத்தளத்திற்கு 5232 (கூடுதலாக 1248) 3984 சதுர அடி மற்றும் முதல் தளத்திற்கு 5096 (கூடுதலாக 1112) 3984 சதுர அடி மற்றும் இரண்டாம் தளத்திற்கு 4510 (கூடுதலாக 526) 3984 சதுரடிக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. மூன்றாம் தளம் 600 சதுரடி அனுமதி பெறாமலும் 3998 சதுரடி அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம், பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள். 087/020/900832, 087/020/900833, 087/020/900834, 087/020/900835, 087/020/900836, 087/020/900837 மற்றும் 087/020/900838 ஆகிய ஏழு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. துறையூர் நகராட்சி ஆணையர் தனது ந.க.எண்.4980/எப்1/2025 நாள் 08.06.2026ல் தான் துறையூர் நகராட்சியில் ஆணையராகவும், பெரம்பலூர் நகராட்சி ஆணையர் (கூபொ) ஆகவும் பணிபுரிந்து வருவதால், திரு.S.அன்பழகன் என்பவரின் 28.01.2026 நாளிட்ட முறையீட்டு மனு சம்மந்தமான விசாரணை 10.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலையினை தெரிவித்து, ஆணையருக்கு பதிலாக நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.த.தவமணி என்பவர் கோப்புகளுடன் வந்து உரிய விளக்கம் அளிக்க அனுமதிக்க கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மேற்படி நகரமைப்பு ஆய்வாளர் 10.06.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருகிறது. அதில் தரைத்தளத்தில் 5096 சதுர அடி பரப்பளவில் தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாக கட்டிடம் மற்றும் 136.00 சதுர அடி பரப்பளவில் 1 ரூம் உள்ளது. முதல் தளத்தில் 5096 சதுர அடி பரப்பளவில் தங்கமயில் மினி ஹால் மற்றும் 10 அறைகள்

இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 2530 சதுர அடி பரப்பளவில் டைனிங் ஹால் மற்றும் 1980 சதுர அடி பரப்பளவில் RCC roof அமையப்பெற்ற வீடு உள்ளது. மூன்றாம் தளத்தில் 600 சதுர அடி பரப்பளவில் RCC roof அமையப்பெற்ற 1 ரூம் உள்ளது. Under Ground (basement) 5096 சதுர அடி பரப்பளவில் குடோன் அமைந்துள்ளது. பார்க்கிங் வசதி இல்லை. முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் இல்லை. மொத்தத்தில் 20534 சதுர அடி பரப்பளவில் மேற்படி வணிக வளாக கட்டிடம் அமைந்துள்ளது.

மேற்படி Basment floor–ல் 1112 சதுர அடியும், தரைத்தளத்திற்கு 1248 சதுர அடியும், முதல் தளத்தில் 1112 சதுர அடியும் மற்றும் இரண்டாம் தளத்தில் 526 சதுர அடியும் அனுமதிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. மூன்றாம் தளம் 600 சதுர அடி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண்கள் 087/020/900832, 087/020/900833, 087/020/900834, 087/020/900835, 087/020/900836, 087/020/900837 மற்றும் 087/020/900838 ஆகிய ஏழு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே மேற்படி கட்டுமானத்தை அனுமதிமயற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998(திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் தங்கமயில் சூப்பர் ஷாப்பி உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்".

9. 2–ம் எதிர்மனுதாரரான தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிட உரிமையாளர் திரு. வேல்முருகன் என்பவர் 10.06.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"எங்களது தங்கமயில் சூப்பர் ஷாப்பி வணிக வளாக கட்டிடத்திற்கு side set back ஒரு பக்கம் 4 அடியும், மறுபக்கம் 6 அடியும் இடம் விடப்பட்டுள்ளது. 3000 சதுர அடியில் பார்க்கிங் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக கட்டிடத்திற்கு 3984 சதுர அடியும், வணிக உபயோக கட்டிடத்திற்கு 11,952 சதுர அடியும் நகராட்சியிடம் வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளது. அனுமதி எண்.92/2014 dt. 30.08.2014).

மேலும் நாங்கள் எங்களது கட்டிடம் வரன்முறை செய்துகொள்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 (Tamil Nadu Town and Country Planning Act, 1971 ) பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளோம் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்".

10. மனுதாரரின் புகார் மனு, அறிக்கை, எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான தங்கமயில் சூப்பர் ஷாப்பி வணிக வளாக கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம், தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருச்சி மாவட்டம், துறையூர்–திருச்சி சாலையில் கட்டப்பட்டுள்ள தங்கமயில் சூப்பர் ஷாப்பி அமைந்துள்ள கட்டிடம் தரை கீழ்தளத்தில் அலுவலகம், தரைத்தளத்தில் சூப்பர் மார்க்கெட், முதல் தளத்தில் 80 பேர் அமரக்கூடிய மினிஹால், மற்றும் 9 ரூம்களுடன் சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் 2 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயின் மீது மெயின் வாசல்படி வைத்து 1 அங்குலம் கூட பார்க்கிங் வசதி, ஒரு அங்குலம் கூட செட்பேக் வசதியின்றி விதிமீறி கட்டப்பட்டுள்ளது என்றும், விதிமீறி கட்டப்பட்டுள்ள தங்கமயில் கட்டிடத்தை மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் அகற்றுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு 29.10.2025ல் புகார் அளித்தும், மேற்படி கட்டிடம் TNCDBR 2019ன்படி உரிய அனுமதி நகராட்சியில் பெறாமல்

இயங்கி வருவதாகவும் தெரிவித்து மேற்படி விதிமீறி கட்டப்பட்டுள்ள தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடத்தின் மீது உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதும், தரைத்தளத்தில் 5096 சதுர அடி பரப்பளவில் தங்கமயில் சூப்பர் மார்க்கெட் வணிக வளாக கட்டிடம் மற்றும் 136.00 சதுர அடி பரப்பளவில் 1 ரூம் உள்ளதும், முதல் தளத்தில் 5096 சதுர அடி பரப்பளவில் தங்கமயில் மினி ஹால் மற்றும் 10 அறைகள் இயங்கி வருவதும், இரண்டாம் தளத்தில் 2530 சதுர அடி பரப்பளவில் டைனிங் ஹால் மற்றும் 1980 சதுர அடி பரப்பளவில் RCC roof அமையப்பெற்ற வீடு உள்ளதும், மூன்றாம் தளத்தில் 600 சதுர அடி பரப்பளவில் RCC roof அமையப்பெற்ற 1 ரூம் உள்ளதும், Under Ground (basement) 5096 சதுர அடி பரப்பளவில் குடோன் அமைந்துள்ளது என்பதும், பார்க்கிங் வசதி, முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் இல்லை என்பதும் மொத்தத்தில் 20534 சதுர அடி பரப்பளவில் மேற்படி வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், Basment floor–ல் 1112 சதுர அடியும், தரைத்தளத்திற்கு 1248 சதுர அடியும், முதல் தளத்தில் 1112 சதுர அடியும் மற்றும் இரண்டாம் தளத்தில் 526 சதுர அடியும் அனுமதிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக கட்டப்பட்டுள்ளது என்பதும், மூன்றாம் தளம் 600 சதுர அடி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதும் எனவே மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998(திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் தங்கமயில் சூப்பர் ஷாப்பி உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

தங்கமயில் சூப்பர் ஷாப்பி வணிக வாளக கட்டிடத்திற்கு side set back ஒரு பக்கம் 4 அடியும், மறுபக்கம் 6 அடியும் இடம் விடப்பட்டுள்ளது என்பதும், 3000 சதுர அடி பார்க்கிங் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதும், வீட்டு உபயோக கட்டிடத்திற்கு 3984 சதுர அடிக்கும், வணிக உபயோக கட்டிடத்திற்கு 11952 சதுர அடிக்கும் நகராட்சியிடம் வரைபட அனுமதி எண்.92/2014 நாள் 30.08.2014ல் பெறப்பட்டுள்ளதும், தங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்து கொள்ள தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாகத் தெரிவித்திருப்பதும், இரண்டாம் எதிர்மனுதாரரான தங்கமயில் வணிக வளாக கட்டிட உரிமையாளர் திரு.வேல்முருகன் என்பவரது வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

11. இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals.xxx xxx xxx.".

எனவே புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்ய Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில், மேல்முறையீட்டு மனு மீதான உண்மைத்தன்மையினை கண்டறிந்து மேல்முறையீடு மீது பெறப்படும் அரசு ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி துறையூர் நகராட்சி

ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ம் ஆண்டு ஆகஸ்டு, 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.அன்பழகன்,
எண்.758/7A, குணாளன் நகர்,
அரவிந்த் பள்ளி முன்புறம்,ஹவுசிங் போர்டு,
துறையூர் – 621 010,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. திரு.வேல்முருகன்,
கட்டிட உரிமையாளர்,
தங்கமயில் சூப்பர் ஷாப்பி கட்டிடம்,
திருச்சி சாலை,
துறையூர் – 621 010,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்:

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.